**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044387

1. District : மாவட்டம் பெரம்பலூர் | ஊழல் தடுப்பு மற்றும் காவல்நிலையம் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 02/2022 | Date: நாள் 09.12.22

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF CORRUPTION — Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: ACT 1988. — Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: (as amended in 2018) — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 07.12.22 11.00hrs — Date to : நாள் வரை 08.12.22 11.30hrs
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.12.22 — Time நேரம் : 17.30hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30 km தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி வருவாய் ஆய்வாளர் (RI) அலுவலகம் கொளக்காநத்தம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சித்ரசி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. முருகானந்தம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30/2022
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்
   (g) Address : முகவரி க.எண்-5/60 பெருமாள் கோவில் தெரு, அ.குடிகாடு, அருகுபாடி (Po) பெரம்பலூர் Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. இந்திராணி வருவாய் ஆய்வாளர் அலுவலகம், கொளக்காநத்தம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:.
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

08.12.2022ம் தேதி மாலை சுமார் 17.30 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது திருமதி.முத்தரசி என்பவர் என் முன் ஆஜராகி எழுத்து மூலமான ஒரு புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று புகாரின் தன்மையும் புகார் தாரர் மற்றும் எதிரியின் நடத்தை மற்றும் உண்மை தன்மை பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டேன். அந்த புகாரின் சாரம் பின்வருமாறுள்ளது. அனுப்புநர்:முத்தரசி வயது-30,க.பெ முருகானந்தம், க.எண்-5-60, பெருமாள் கோவில் தெரு,அ.குடிகாடு, வரகுபாடி (அஞ்சல்) பெரம்பலூர் (வட்டம் & மாவட்டம்) பெறுநர். உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர். ஐயா, நான் பெரம்பலூர் மாவட்டம் அயலூர் குடிகாடு கிராமத்தில் என்னுடைய கணவர் முருகானந்தம் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். எனது வீட்டுக்காரர் கடந்த 6 வருடங்களாக சிங்கப்பூரில் கூலி வேலை பார்த்துவிட்டு ஜூலை மாதம் கடைசியில தான் லீவில் ஊருக்கு வந்தார். என்னுடைய மாமனார் ராஜகோபால் 2015ல் இறந்து விட்டார். என்னுடைய மாமனார் வரகுபாடி கிராமத்தைச் சேர்ந்த சின்னபய்யன் மகன் முத்தான் என்பவரிடம் இருந்து கடந்த 1958-ம் வருடம் வரகுபாடி கிராமம் புல எண்-243-2ல் 3.14ல் 1.57 செண்ட் மட்டும் கிரயமாக பெரம்பலூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 914-1958-ன் மூலம் 25.6.1958 அன்று பெற்று எங்களுடைய அனுபவத்தில் பயிரிட்டு வருகிறோம். இந்நிலையில்

(Separate Sheet Enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
M. முத்தரசி

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09/12/22

Name: பெயர் S. VIJAYALAKSHMI.
Rank: நிலை ......................No. எண் ..........
INSPECTOR OF POLICE
VEAC PERAMBALUR
09.12.22

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

சுமார் 6 மாதங்களுக்கு முன்பு நாங்கள் பயிரிட்டு வரும் மேற்குறிப்பிட்டுள்ள நிலத்தில் உள்ள UDR-ல் எங்களது பெயர் விடுபட்டுள்ளதாக தெரிய வந்தது. மேற்படி UDR-ல் ஏற்பட்டுள்ள தவறுகளை சரி செய்ய வேண்டி நான் என்னுடைய கணவருடன் பெரம்பலூர் DRO அலுவலகத்திற்கு சென்று எனது கணவர் மூலம் எங்களுக்கு சொந்தமான மேற்குறிப்பிட்ட இடத்தில் தவறுதலாக வேறு சில நபர்களின் பெயர்கள் UDR ல் வந்துள்ளதால் UDR திருத்தம் செய்ய வேண்டி 03.09.2022-ம் தேதி மனு கொடுத்தோம். நாங்கள் கொடுத்த மனுமீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் இந்த நிலப்பிரச்சனை சம்மந்தமாக 21.11.2022-ம் தேதி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரிடம் மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு கூட்டுபட்டா வழங்கக் கோரி எனது கணவர் மூலமாக மனு கொடுத்தோம். இது சம்மந்தமாக வரகுபாடி VAO அலுவலகம் சென்று கேட்டபோது நான் உங்களுடைய மனுவினை RI அவர்களின் மேற்பார்வைக்கு அனுப்பிவிட்டேன் என்று சொன்னார். நீங்கள் இதுசம்மந்தமாக கொளக்காநத்தம் RI அலுவலகம் சென்று விபரம் கேட்டுக்கொள்ளுமாறு கூறிவிட்டார். நான் எனது கணவருடன் 07.12.2022-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு கொளக்காநத்தம் சென்று RI அலுவலகத்தில் சென்றபோது RI திருமதி. இந்திராணி அவர்களும் அவருடைய அருகில் மற்றொரு நபரும் உட்கார்ந்திருந்தார். எங்களுடைய மனு சம்மந்தமாக கேட்டபோது மனுவை பார்த்துவிட்டு உங்களுடைய நில ஆவணம் மாற்றம் செய்வதில் நிறைய பிரச்சனை உள்ளதாகவும் அதற்கு நிறைய செலவு ஆகும் என்று சொன்னார். அதற்கு நான் எவ்வளவு செலவு ஆவுமானு கேட்டதற்கு அலுவலக செலவு மற்றும் உயரதிகாரிகளை கவனிப்பதற்கு ரூ-50000-க்கு மேல செலவாகும்னு சொன்னார். அவ்வளவு செலவாகுமானு கேட்டதற்கு அலுவலக செலவுக்கும் உயரதிகாரியை கவனிக்கவும் லஞ்சமாக பணம் கொடுத்தாதான் வேலை ஆகும்னு சொன்னார். சரிமா நான் பாக்குறேனு சொல்லிவிட்டு RI அலுவலகத்தை விட்டு வெளியே வந்து நின்றபோது RI-ன் அருகில் உட்கார்ந்திருந்த நபர் வெளியே வந்து எங்களிடம் தான் RI- ன் கணவர் என்று அறிமுகம் செய்து கொண்டு உங்களுக்கு UDR மற்றும் பட்டா மாற்றுவது சம்மந்தமாக மேடம் உங்களது அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்டு விட்டார். அவர் கேட்ட ரூ.50,000- கொடுத்தா வேலை முடிந்துவிடும் என்றும், பணத்தை ரெடி பண்ணிட்டு வந்து பாருங்கனு RI சொன்னதாக சொல்லி எங்களை அனுப்பிவிட்டார். பிறகு 08.12.2022-ம் தேதி என்னுடைய கணவர் வெளிநாடு செல்வது சம்மந்தமாக பெரம்பலூருக்கு செல்வதால் என்னை கொளக்காநத்தம் சென்று நாம் கொடுத்த மனு சம்மந்தமாக பார்த்துவிட்டு வருமாறு சொன்னார். பிறகு நான் இன்று 08.12.2022-ம் தேதி காலை 11.30 மணிக்கு கொளக்காநத்தம் RI அலுவலகம் சென்றபோது RI-யும் அவரது கணவரும் அலுவலகத்தில் இருந்தார்கள். எங்களுடைய மனு சம்மந்தமாக கேட்ட போது RI அம்மா நான் தான் ஏற்கனவே உங்களுட்ட சொன்னேனே ரூ.50,000- ரெடி பண்ணிட்டிங்களானு கேட்டார். அம்மா நான் 100 நாள் வேலைக்கு சென்று கஷ்டப்பட்டும், கூலி வேலை செய்தும் குடும்பம் நடத்தி வருகிறேன். கொஞ்சம் பார்த்து சொல்லுங்கமா என்றும் எங்க ஆவணம் எல்லா சரியாதானமா இருக்குனு சொன்னதுக்கு RI கடைசியாக ரூ.20,000- உடனே ரெடி பண்ணி கொடு. உன் மனுவ சீக்கிரமா பரிந்துரைத்து அனுப்பி விடுகிறேன் என்று சொன்னார். நான் வெளியே வந்து யோசித்து நம்மிடம் எல்லா ஆவணமும் சரியாக இருந்தும் கொளக்காநத்தம் RI திருமதி.இந்திராணி நம்மிடம் லஞ்ச பணம் கேட்குறாங்களே என்று என் கணவரிடம் சொல்லிவிட்டு எனக்கு RI திருமதி.இந்திராணி கேட்ட பணத்தை லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லாததால் அவர் லஞ்சமாக கேட்ட பணம் 20,000/-யை எடுத்துக் கொண்டு RI திருமதி.இந்திராணி மீது இன்று 08.12.2022-ம் தேதி மாலை 05.30

மணிக்கு லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க வந்துள்ளேன். மேற்படி RI திருமதி.இந்திராணி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.இப்படிக்கு (sd***M.முத்தரசி) இடம்- பெரம்பலூர் நாள்- 08.12.2022. அந்த மனுவை நான் பெற்று அதில் Sir, Received this written complaint from the complainant on 08.12.2022 at 17.30 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 09.12.2022 at 06.45 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.02/2022, u/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) S.Vijayalakshmi, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

09/12/22

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
Perambalur